நெமிலி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையம்.

*622 வினு.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1961-ம் ஆண்டில், அரக்கோணம் தாலுக்கா, நெமிலி பஞ்சாயத்து யூனியனில் பிரைமரி ஹெல்த் சென்டர் ஒன்று அமைப்பதற்கென . பொதுமக்கள் ரூ. 7,500 கொடுத்தது, இடமும் கொடுத்துள்ளனரா [illegible] ?

(இ) ஆம் எனில், அதற்கான கட்டடம் கட்டி முடிந்துவிட்டதா ?

(உ) இல்லை எனில், காரணமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) : நெமிலி பஞ்சாயத்து யூனியனில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு மக்கள் உரிய தொகையாக ரூ. 7,500, 1961-ம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப் பட்டது. ஆனால் மேற்படி நிலையம் கட்டுவதற்கான நிலத்தை இதுவரை அரசிற்கு வழங்காததால் சுகாதார குடும்ப நல இயக்குநரால் மேற்படி நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்படவில்லை.

திரு. நா. வீராசாமி : நெமிலி பஞ்சாயத்தில் நிலம் கொடுக்கப்படவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டிக் கொடுக்க அனுமதி இல்லையென்று சொன்னார்கள். பொதுவாக தமிழ் நாட்டில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் எல்லாம் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இருக்கக் காரணம் சைனுக்காரன் படையெடுத்தபோது மத்திய அரசாங்கம் உதவியை நிறுத்திவிட்டதுதான். இப்போது மீண்டும் மத்திய அரசை அணுகி அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று தமிழகத்தில் இருக்கும் எல்லா பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கும் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மானியக் கோரிக்கை விவாதத்தின் போதே சொன்னேன். 121 ஆரம்ப சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடங்களைப் பெற்றிருக்கின்றன. 1962 முதல் 1966 வரை நெருக்கடி காரணமாகக் கட்டடங்கள் கட்டுவது நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டு 30 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. எங்கே இடம் ஐந்து எக்கர் அளவுக்கு இருந்தாலும் பத்தாயிரம் ரூபாய் வரை பணமும் கொடுக்கிறுர்கள். இதிலே மேலும் சங்கடம் எதுவும் இல்லாமல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு வருகின்றன.

Reservation of seats in colleges

*623 Q.—Thiru K VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state, whether the Government proposes to retain and observe the rules of reservation of certain percentage of seats for Scheduled Castes and Backward Classes in the matter of admission of students in Government Colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. கே. விநயகம் : மெடிகல் கல்லூரிகளைப் போலவே டெக்னிகல் கல்லூரிகளிலும் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையையும், மாவட்டத்திற்கு இவ்வளவு பர்சன்டேஜ் என்ற அடிப்படையையும் அனுசரிக்கக்கூடாது என்று ஹைகோர்ட்டில் தீர்ப்பு வந்திருக்கிறது. அதற்கும் இதற்கும் முரண்பாடாக இருக்கிறதே, இதை எப்படித்

தவிர்க்கப் போகிறார்கள்? மெடிகல் காலேஜ், டெக்னிகல் காலேஜ்கள் தவிர சாதாரண காலேஜ்களிலாவது இவ்வித ஜட்ஜ்மெண்டுக்கு இடம் தராமல் ஏற்கனவே இருக்கும் முறையை அனுசரிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று பிற்பட்ட வகுப்பினருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் இடம் ஒதுக்கக்கூடாது என்று தீர்ப்பு வரவில்லை. மாவட்ட வாரியாக மருத்துவக் கல்லூரிக்கும் பொறியியற் கல்லூரிக்கும் இடம் ஒதுக்கக்கூடாது என்பதுதான் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் எந்த அளவுக்கு ஒதுக்க வேண்டுமோ அது ஒதுக்கப்பட்டு மாணவர்களும் வந்து சேருகிறார்கள். அந்த வகையிலே பள்ளி கல்வி இயக்குநரும், கல்லூரிக் கல்வி இயக்குநரும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. பி. துரைராஜ்: தாழ்த்தப்பட்டவர்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளுவதற்கான விகிதாசாரம் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டது. தற்சமயம் ஏராளமான மாணவர்கள் சேருவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த சதவிகிதத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த சதவிகிதம் மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் வைக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களில் இருந்து ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதம் அளவுக்கே வந்து சேராத நிலை இருந்தது. இப்போது அந்த அளவுக்கு வந்து சேருகிறார்கள். மருத்துவக் கல்லூரிக்கு 16 சதவிகிதம் என்று ஒதுக்கியிருந்தாலும் அவர்கள் 'ஜெனரல் பூலில்' கூட 9 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். பிற்பட்டவர்களுக்கு 25 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் சென்ற ஆண்டுக் கணக்கைப் பார்க்கும்போது 41, 42 சதவிகிதம் அளவுக்கு வருகிறது. மருத்துவக் கல்லூரியை எடுத்துக் கொண்டால் 50 சதவிகிதத்தினர் பிற்படுத்தப்பட்டவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். பொறியியற் கல்லூரியில் 55, 56 சதவிகிதம் வருகிறது. இந்த சதவிகிதத்தை மேலும் உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை. குறைந்தது 25 சதவிகிதமே தவிர, உச்ச வரம்பு கிடையாது. பொதுவாக அந்த சதவிகிதத்திற்கு அதிகமாகவேதான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

*624 Q.— THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government propose to reserve larger number of seats in the Engineering Colleges from 1968 for students from other States?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தற்பொழுது அவ்வாறான செயற்குறிப்பு எதுவும் இல்லை. அவ்வாறான வேண்டுகோள்கள் வரும்பொழுது அவைகளின் தகுதிக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: பொறி இயல் கல்லூரியில் இப்போது ஒதுக்கப்பட்ட இடங்களில் வெளி மாநிலங்களில் இருந்து யாரும் வந்து சேருவதில்லை. அந்த இடங்களில் நம்முடைய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நம்முடைய மாநிலத்திலே ஓரளவு மாணவர்கள் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. மத்திய அரசு குறைக்கும்படி சொல்லியிருக்கிறது. 30 சதவிகிதம் அவர்கள் குறைக்க வேண்டுமென்று சொன்னாலும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிலைமை எப்படி இருக்குமோ என்ற காரணத்தால் அந்த அளவுக்குக் குறைக்கவில்லை. பிற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்களும் ஆண்டுக்கு ஆண்டு பெருகியிருக்கிறது. சிங்கப்பூர், மலேயா, பிஜித் தீவு போன்ற இடங்களிலிருந்து வருகின்ற மாணவர்களை எடுத்துக் கொள்வதற்காக அந்த இடங்கள்